# உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக, இரண்டத்தனையாய் பலன் வரும். ஏசாயா 61:7

ஆம், சகோதரனே, சகோதரியே.

"**இரண்டத்தனையாய் பலன் வரும்**" ஆமென்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பிறப்பை கொண்டாட ஆயத்தப்படும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கும், அனுதின வாழ்க்கையில் இயேசுவின் பிறப்பை அனுபவிக்கும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் என் அன்பின் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்களை மிகுந்த சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

வருடத்தின் கடைசியில் வந்து விட்டீர்கள். புதுவருடம் பிறக்க சில நாட்கள்தான் உள்ளது. ஒருமுறை கடந்த வருடத்தை சிந்தித்துப் பாருங்கள். எப்படி துவக்கினீர்கள். எப்படி முடிந்தது ?

"**ஐயோ, வெட்கம்**"

ஒரு கூட்ட மக்கள் கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து துதித்துக் கொண்டிருக்கும்பொழுது, நீங்கள் வெட்கத்தோடு, கர்த்தரைத் துதித்துக் கொண்டிருக்கிறீர்கள். எதிர்கால சிந்தனை உங்கள் உள்ளத்தில் வந்துகொண்டே இருக்கிறது.

உங்களால் ஒன்றும் புரிந்துகொள்ள முடியவில்லை. ஓடவில்லை. திகைக்கிறீர்கள். மூச்சுமுட்டுவது போல் உள்ளது. சிந்தித்துவிட்டால் கண்ணீர் பொங்கி வருகிறது. நெஞ்சு படபடவென அடிக்கிறது. நல்ல செய்தியைக் காணவில்லை. எட்டி, எட்டி, அண்ணாந்து பார்த்து, கண் பூத்துப் போகிறது.

"**வெட்கம், வெட்கம், வெட்கம். .**"

இதே நேரத்தில் கர்த்தருடைய வாக்குத்தத்தம் என்னமாய் இருக்கிறது என்று பார்க்கிறீர்களா ?

வேதம் சொல்கிறது,

"**உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக,**
**இரண்டத்தனையாய் பலன் வரும்**" – என்பதாக.

**பக்தன் பாடுகிறார். . .**

கர்த்தரை நம்பிடும் தேவ ஜனமே கலங்காதே ஒருபோதும் வெட்கமடைவதில்லை.
செங்கடல் கோரமாய் முன்னே நிற்கும், சேனைகள் பின்னால் தொடர்ந்து வரும்,
ஆனாலும், முன்னேறிப்போ என்கிறாரே, அவரே ஓர் வழி திறந்திடுவாரே.
சீயோனே உந்தன் பாடுகளெல்லாம், சிலகாலம் என்று நினைத்தே பாடு.

ஆம், எவ்வளவு அழகாக பக்தன் பாடுகிறார். நீங்களும் பாடுங்கள். பரவசமடையுங்கள்.

**ஏசாயா 61 : 7 சொல்கிறது,**

இலச்சைக்குப் பதிலாகத் தங்கள் பாகத்தில் சந்தோஷப்படுவார்கள். அதினிமித்தம் தங்கள் தேசத்தில் **இரட்டிப்பான சுதந்திரம் அடைவார்கள்.** நித்திய மகிழ்ச்சி அவர்களுக்கு உண்டாகும்.

**சகரியா 9 : 12–ஐ வாசித்துப் பாருங்கள்.** நம்பிக்கையுடைய சிறைகளே, அரணுக்குத் திரும்புங்கள், **இரட்டிப்பான நன்மையைத் தருவேன்.** இன்றைக்கே தருவேன் – என்பதாக உள்ளது.

**யோபு 42 : 10–ஐ அப்படியே நம்புங்கள்.**

யோபு தன் சிநேகிதருக்காக வேண்டுதல் செய்தபோது, கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார்.

யோபுக்கு **முன் இருந்த எல்லாவற்றைப் பார்க்கிலும் இரண்டத்தனையாய்** கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார்.

இந்த தேவன், இன்றைக்கும் ஜீவிக்கிறார். வெட்கத்தோடு காட்சியளிக்கும் அன்பு சகோதரியே, சகோதரனே,

"**உன் வெட்கத்துக்குப் பதிலாக**" – என்ற வேத வசனத்தை மீண்டும் ஒருமுறை சிந்தித்துப் பாருங்கள். உங்கள் வெட்கத்தின் அளவைவிட ஆசீர்வாதத்தின் அளவு இரண்டு மடங்கு ஆகும் என்பதை வேதம் திட்டமாகக் கூறுகிறது.

ஒருமுறை தேவனுடைய சமுகத்தில் பாவ அறிக்கை செய்து, தாழ்த்தி, கர்த்தருடைய **இரக்கத்திற்காக** கெஞ்சுங்கள். கர்த்தருடைய இரக்கம் மகா பெரியது.

"**உங்கள் வெட்கத்துக்குப் பதிலாக, இரண்டத்தனையாய் பலன் வரும்**" – ஆமென்.

**உங்கள் விசுவாசத்தை பின்வருமாறு அறிக்கை செய்யுங்கள்**

**என் வெட்கத்திற்கு பதிலாக**

**இரண்டத்தனையாய் பலன் வரும். ஆமென்.**